www.tamilarangam.net

# தமிழீழ விடுதலைப் புலிகள்

## LIBERATION TIGERS OF THAMIL EALAM

04. 05. 1983

## அரச பயங்கரவாதத்தை தேர்தலினால் வெற்றி கொள்ள முடியாது !

**விடுதலைப் போராட்டத்தில் ஈடுபட்டிருக்கும் தமிழீழ மக்களே!**

நாம் நீண்ட நெடுங்காலமாகச் சிங்கள இனவாத அரசினால் மென்மேலும் ஒடுக்கு முறைக்கு ஆளாவதும், அதன் உச்சக்கட்டமாக இப்போது பயங்கரவாதத் தடைச்சட்டத்தின் கீழ் எமது இளைஞர்கள் சிறையில் அடைபட்டுச் சித்திரவதை அனுபவித்துக் கொண்டிருப்பதுடன், குரூரமாகக் கொலைசெய்யப்படுவதும், விரிவுரையாளர்கள், வைத்தியர்கள் போன்ற எம்மினத்தின் புத்திஜீவிகள், மதகுருமார், மாணவர், பெண்கள் ஆகியோர் சிறையிற் துன்பப்படுவதும் அன்றாட நிகழ்ச்சியாகவுள்ள இவ் வேளையில் சிங்கள இனவாத ஆக்கிரமிப்பாளர்களாகிய சிறீலங்கா அரசினால் எம்மக்கள் மீது உள்ளூராட்சி நிர்வாகத்திற்கான தேர்தல் வலிந்து திணிக்கப் படுகிறது.

இதில் நாம் பங்குபற்றுவதால், நாமும் சிறீலங்கா நாட்டிற்குக் கீழுள்ள ஓர் அமைப்பு என்பதையே ஏற்றுக் கொண்டவராவோம்.

இதுவரை காலமும் தமிழீழ விடுதலையைத் தேர்தல் வெற்றிக்காக, மேடைக்கோஷமாகப் பயன்படுத்திய சில தீயசக்திகளின் அபிவிருத்திச் சபைத் தேர்தலின் வெற்றியினால், ஏற்படுத்தப்பட்ட அபிவிருத்திச் சபைத் தலைவர் பதவிகளினாலேயே இன்னும் தமிழீழ மக்களுக்கு எந்த அபிவிருத்தியையும், பாதுகாப்பையும் ஏற்படுத்த முடியவில்லை. இனியும் ஏதோ உள்ளூராட்சி மன்றத் தேர்தலில் "வெற்றிபெற்று" தமிழீழ விடுதலைக்கு இட்டுச் செல்வது போல, வழமையான "தேர்தல் கால தமிழீழ கோஷத்தை" முன்வைத்து சிங்கள சிறீலங்கா அரசின் ஆட்சியதிகாரத்திற்கு முண்டு கொடுக்கவந்துவிட்டார்கள். இவர்களுக்கு வேண்டியதெல்லாம் பதவியொன்றேதவிர வேறில்லை.

எனவே தமிழ் மக்கள் இனியும் இப்படியான தீய சக்திகளின் தேர்தற்கால " திடீர்த் தமிழீழ வலையில் "சிக்காது, தேர்தலை நிராகரிக்குமாறு கேட்டுக் கொள்கிறோம்.

இதே வேளையில், தமிழீழ மக்கள் மீது கட்டவிழ்த்து விடப்பட்டிருக்கும், 'அரச பயங்கர வாத ஓநாயின் வாயிலிருந்து ' வடிந்துகொண்டிருக்கும் குருதி கூடக் காயாத நிலையில், உள்ளூராட்சித்தேர்தலில் எம்மக்களில் ஒருசிலரின் வாக்குகளை வெற்றிகொள்வதின்மூலம், வெளியுலகத்திற்கு அரச பயங்கரவாதத்தை நியாயப்படுத்த முனையும் சிங்கள இனவாத அரசிற்குச் சார்பாக இனியும் இங்கு இயங்கிக் கொண்டிருக்கும் துரோகிகளின் செயல்களை எம்மால் எவ்வகையிலும் அனுமதிக்க முடியாது.

இதனாலேயே தற்போதய உள்ளூராட்சித் தேர்தலில் அடக்குமுறை அரசு சார்பில் இயங்கிய க. வை. இரத்தினசிங்கம், சா. சி. முத்தையா, எஸ். எஸ். இராஜரட்ணம் , ஆகியோர் மீது நாம் இராணுவ நடவடிக்கைகளை மேற்கொண்டோம்.

இப் பிரசுரத்தின் மூலம், நாம் இனவாத அரசிற்குச் சார்பாக இயங்கும், எம் இனத்தின் எட்டப்பர்க்குக் கூற விரும்புவது இது தான். " இனிமேலும் தமிழீழத்தில் எவரும் சிங்கள இனவாத அரசிற்குச் சார்பாக இயங்காதீர்."

உங்களிடம் உருக்கமாக வேண்டுவதும் இதுதான் " உங்கள் அழிவுகளினால் உங்களது மனைவிகளை, எங்களது சகோதரிகளை நிர்க்கதிக்குள்ளாக்காதீர். எமது எதிர்காலச் சந்ததியினராகிய தமிழீழ மழலைகளை அநாதைகளாக்காதீர் '

இவ் வேண்டுகோளையும் மீறி எம் மக்களின் தேசிய விடுதலைப் போராட்டத்திற்கு எதிராக, சிங்கள இனவாத அரசின் கைக்கூலிகளாக நீங்கள் செயற்படுவீர்களேயானால், நாம் எடுக்கும் தொடர்ந்த நடவடிக்கைகள் இன்னும் கடுமையானதாகவே இருக்கும். நாம் எடுக்கும் இராணுவ நடவடிக்கைகளை எதிர் கொள்ள சிறீலங்கா அரசின் கூலிப்படைகளின் உதவியை நாட எண்ணாதீர்.

இனவாத அரசிற்கு சார்பாக இயங்கும் எல்லாவித பதவிகளிலிருந்தும் விலகிக்கொள்ளுங்கள், விடுதலைக்குப் போராடும் எம்மக்களுடன் ஐக்கியமாகி விடுங்கள், குறைந்தபட்சம் சிறீலங்கா அரசு சார்பாக இயங்குவதிலிருந்தாவது ஒதுங்கிக்கொள்ளுங்கள்

தமிழீழ மக்களே ! ★ சிறீலங்காவின் தேர்தல் மாயையிலிருந்து விடுபடுவோம் ! ★ சிறீலங்காவின் சுகல [illegible] நிராகரிப்போம் ! ★ வெகுஜன ஆயுதப் போராட்டத்திற்கு அணிதிரள்வோம் !

**வெல்க தமிழீழம் !**

**புலிகளின் தாகம் தமிழீழத் தாயகம் !**

| | |
|---|---|
| வே. பிரபாகரன் | அரசியற் குழு |
| தலைவர். தமிழீழ விடுதலைப் புலிகள் | தமிழீழ விடுதலைப் புலிகள் |

வெளியீடு — பிரச்சார வெளியீட்டு வாரியம்
தமிழீழ விடுதலைப் புலிகள்.

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்